11 07 2025 FRIDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மின்சாரத்தில் இயங்கும் சரக்கு வாகனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- சர்வதேச தரத்திலான கயிறு பரிசோதனை ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் பொள்ளாச்சியில் அமைக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் செல்வி Shobha Karandlaje அறிவித்துள்ளார்.
- பதிவுத்துறையின் சேவைகளை விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் வழங்குவதற்காக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.
- நெசவாளர்களின் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது..
- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Saarika தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

மின்சாரத்தில் இயங்கும் சரக்கு வாகனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இத்திட்டத்தை கனரக தொழில் துறை அமைச்சர் திரு குமாரசாமி தொடங்கி வைத்தார்.

முதன்முறையாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர், இந்த திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக வாகனம் ஒன்றுக்கு 9 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வரை ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றார்.

தில்லி பதிவெண் கொண்ட வாகனங்களுக்கு மட்டும் இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் சிமெண்ட், எஃகு, துறைமுகம் மற்றும் சரக்கு போக்குவரத்து துறைகள் பயன்பெறும் என்றார்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மத்திய அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு குமாரசாமி தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சர்வதேச தரத்திலான கயிறு பரிசோதனை ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் பொள்ளாச்சியில் அமைக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் செல்வி Shobha Karandlaje அறிவித்துள்ளார்.

இன்று பொள்ளாச்சியில் கயிறு தொழில்துறையினர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இந்த துறையின் மேம்பாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அவர் கூறினார்.

கயிறு தொழில்துறையின் மையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும செல்வி Shobha Karandlaje தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சர்வதேச தரத்திற்கு இணையாக கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் தேசிய கல்விக் கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் Sukanta Majumdar கூறியுள்ளார்.

குஜராத்தின் கெவாடியாவில் நடைபெற்ற மத்திய பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் பங்கேற்ற இரண்டு நாள் மாநாட்டில் இன்று அவர் நிறைவுரையாற்றினார்.

உயர்கல்வி பயிலும் மகளிரின் எண்ணிக்கை 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 32 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பல்கலைக் கழகங்களுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியிலில் 54 இந்திய பல்கலைக் கழகங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் டாக்டர் Sukanta Majumdar கூறினார்.

>>>>>>><<<<<<<

மக்கள் தொகை கட்டுப்பாட்டில் தமிழகம் முன்னிலை வகிப்பதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பெண்களின் முன்னேற்றம், அனைவருக்கும் மருத்துவம் மற்றும் கல்வி, நீடித்த வளர்ச்சியை உறுதி செய்தல் போன்றவற்றில் திமுக அரசு கவனம் செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

பதிவுத்துறையின் சேவைகளை விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, சென்னை நொளம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலக வளாகத்தில் சுயஉதவி குழுவை சேர்ந்த மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் முக்கிய துறையாக பதிவுத்துறை தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நெசவாளர்களின் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொங்கல் பண்டிகைக்காக வழங்கப்படும் வேட்டி சேலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாக வெளியான செய்திகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, ஒரு லட்சம் விசைத்தறி நெசவாளர்கள் இரண்டு மாதங்களுக்கு வேலையிழக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏழை மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்படும் திமுக அரசுக்கு, சட்டப்பேரவை தேர்தலில் உரிய பாடத்தினை மக்கள் புகட்டுவார்கள் என்று திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

அஇஅதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான மனுக்கள் மீது எப்போது முடிவெடுக்கப்படும் என்பது குறித்த காலவரம்பை வரும் 21 ஆம் தேதிக்குள் தெரிவிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு ஆர் சுப்பிரமணியன், திரு கே சுரேந்தர் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணையும் அன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், ஒரு சில இடங்களில் அடுத்த 3 தினங்களுக்கு வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் - 50 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் முதன்முறையாக கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறையினர் வார விடுமுறையை குடும்பத்துடன் செலவிடுவதற்கு ஏதுவாக கைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று நாகர்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த சேவையை தொடங்கி வைத்த காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட பைட் - ஸ்டாலின் 39 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொது விநியோக திட்டம் தொடர்பான குறைதீர் சிறப்பு முகாம் நாளை சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலகங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியை ஆட்சியர் திரு அருண்ராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பிரதாப் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<

விழுப்புரத்தில் போதைப் பொருளின் தீமைகள் குறித்து கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 7 ஆவது நாளாக 120 அடியாக நீடிக்கிறது.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Saarika தங்கப்பதக்கம் வென்றார்.

கிர்கிஸ்தானின் Bishkek -ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியாவின் ரீனா, நேகா ஷர்மா, அஞ்சலி, முஸ்கன், ஹர்ஷிதா மற்றும் காஜல் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் பங்கேற்க இந்தியாவின் Navdeep Singh தகுதி பெற்றுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இந்தியன் ஓபன் பாரா தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்று அவர் உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றார்.

>>>>>>><<<<<<<

உலக நீச்சல் சாம்பியன் போட்டி சிங்கப்பூரில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Aryan Nehra, Sajan Prakash உள்ளிட்ட 16 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>><<<<<<<

இந்தியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இங்கிலாந்து முதல் இன்னிங்சில் சற்றுமுன் வரை 8 விக்கெட் இழப்புக்கு 359 ரன் எடுத்துள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பும்ரா அபாரமாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

>>>>>>><<<<<<<

ரொமேனியா சர்வதேச சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 6-4 6-4 என்ற செட்கணக்கில் துனிஷியாவின் Alaa Trifi ஐ வென்றார்.

>>>>>>>end<<<<<<<